வலயக் கல்வி அலுவலகம் - கிண்ணியா

க.பொ.த(சா/த) மாணவர்களின் வரலாறு பாட அடைவை மேம்படுத்தும் விசேட செயற்திட்டம் - 2020

தரம் - 11 **நேரம் - 02 மணித்தியாலங்கள்**

சுட்டெண் : **புள்ளி :**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்கு 150 புள்ளிகள் வழங்கப்படும்.**

வினா இலக்கம் - 01

(அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

i. அனுராதபுரம், எம்பக்க, சீகிரியா, வல்லிபுரம், அரிப்பு, பொலநறுவை, தேவநகரம், இரணைமடு, கண்டி, ஹல்து முல்ல, இபன்கட்டுவ, மாந்தை (12 புள்ளிகள்)

ii. மலாக்கா நீரிணை, காவேரி நதி, செங்கடல், கிரேக்கம், பாரசீக வளைகுடா, லிஸ்பன் (06 புள்ளிகள்)

(ஆ)

i. கீழே A,B,C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. மகாவம்சத்தை எழுதிய மகாநாமதேரர் வாழ்ந்த இடம் எது?
B. 38,000 வருடங்களுக்கு முன்னர் தற்கால கலாசாரம் நிலவியதாக அறியப்பட்ட இடம் எது?
C. இலங்கையின் மயானங்கள் தொடர்பான ஆதாரங்கள் எம்முறையில் கிடைக்கப்பெற்றன?
D. திஸ்ஸமகாராம குளத்தை கட்டிய மன்னன் யார்? (04 புள்ளிகள்)

- A மற்றும் B இனால் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.



1) படத்தில் காட்டப்பட்டுள்ள கல்வெட்டின் பெயர் யாது?
2) இவ்வாக்கம் எக்காலத்துக்குரியது?
3) இவ்வாக்கத்துக்குரிய மன்னன் யார்?
4) இவ்வாக்கத்துக்குரிய மன்னன் எந்த வம்சத்தைச் சேர்ந்தவன்? (04 புள்ளிகள்)

iii.



1) அருகில் உள்ள கலையாக்கத்தின் பெயர் என்ன?
2) இக்கலையாக்கம் காணப்படும் இடம் யாது?
3) இவ்நிர்மாணிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள் யாது?
4) இக் கலையாக்கம் எந்த மரபைத் தழுவி அமைக்கப்பட்டுள்ளது? (04 புள்ளிகள்)

வினா இலக்கம் - 02

(அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

i. கோட்டை, ஆணையிறவு, கோகர்ணம், குருணாகல், ஜஜ்ஜிர நதி, யாழ்ப்பாணம், மாத்தளை, அம்பாந்தோட்டை, செங்கடகல, மகியங்கணை, சிவனொளிபாதமலை, ஜம்புகோளப்பட்டினம் (12 புள்ளிகள்)

ii. இத்தாலி, கொன்ஸ்தாந்துநோபிள், பீஜிங், பிரான்ஸ், பிரித்தானியா, ஸ்பெயின் (06 புள்ளிகள்)

(ஆ)

i. கீழே A,B,C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. சமந்த பாசதிகாவ எனும் நூலை எழுதியவர் யார்?
B. பருகம பலரை மத்திய மயமாக்கப்பட்ட அதிகாரத்திற்குள் இணைத்துக் கொள்வதன் மூலம் உருவான பதவி?
C. காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்காக உபசக்க ரோகநாச எனும் வைத்தியசாலையை அமைத்தவர் யார்?
D. கி.பி.9ம் நூற்றாண்டில் இலங்கையை சிவப்புத்தீவு என அழைத்தவர்கள்? (04 புள்ளிகள்)

- A மற்றும் B இனால் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.



1) அருகில் காணப்படும் நிர்மாணிப்பு யாது?
2) இவ் நிர்மாணிப்பு அமைந்துள்ள நகரம் யாது?
3) இவ் நிர்மாணிப்பை உருவாக்கிய அரச வம்சம் எது?
4) இவ் நிர்மாணிப்பு எச் சமயத்துடன் தொடர்புடையது? (04 புள்ளிகள்)

iii.



1) அருகில் காணப்படும் கலைப்படைப்பினைப் பெயரிடுக?
2) இக்கலைப்படைப்பு காணப்படும் மாவட்டம் எது?
3) இக் கலையாக்கம் எந்த மன்னனால் உருவாக்கப்பட்டது?
4) இக் கலைப்படைப்பு மாதிரியான இந்திய குகை ஓவியம் எது? (04 புள்ளிகள்)

வினா இலக்கம் - 03

(அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

i. மட்டக்களப்பு, தெவிநுவர, கலாதித்த, கற்பிட்டி, பூநகரி, இராவணஎல்ல, கொடவாய, வளவகங்கை, இரணைமடு, உடரஞ்சாமடம, காலி, சமனெலவெவ (12 புள்ளிகள்)

ii. ஒல்லாந்து, உரோம், மியன்மார், கோவா, பிரான்ஸ் , ஸ்பானியா (06 புள்ளிகள்)

(ஆ)

i. கீழே A,B,C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. அரசாங்கசேவை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலம் எவ்வாறு அழைக்கப்பட்டுள்ளது?

B. குளத்தில் அமைக்கப்படும் தொழிநுட்பக் கூறுகளிலே அலைதாங்கியின் முக்கிய தொழிற்பாடு யாது?

C. மருத்துவக் குணமுடைய இலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சி எப்பெயர் பெற்றது?

D. காட்டு மரங்களை வெட்டவேண்டாம் எனக் கல்வெட்டில் குறிப்பிட்டிருந்த மன்னன் யார்? (04 புள்ளிகள்)

- A மற்றும் B இனால் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.



1) இதன் பெயர் என்ன?
2) எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
3) இது எந்த மன்னனுடன் தொடர்புபட்டது?
4) இதனுடன் தொடர்புபட்ட விகாரை அல்லது சைத்திய எது? (04 புள்ளிகள்)

iii.



1) இவ் ஓவியம் காணப்படும் விகாரை எது?
2) இது எந்த நூற்றாண்டில் வரையப்பட்டது?
3) இதன் மூலம் சித்தரிக்கப்படும் விடயம் என்ன?
4) இப்படம் சித்தரிக்கும் விடயத்துடன் தொடர்புடைய மன்னன் ஒருவரைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

வினா இலக்கம் - 04

(அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

i. புலத்தி நகரம், பண்டுவஸ்நுவர, கொத்மலை, மாகம, கம்பளை, ஸ்ரீ ஜயவர்த்தனபுரக் கோட்டை, ரைகம, தம்பதெனியா, யாப்பகூவ, களனி, சிலாபம், மகாவலிகங்கை (12 புள்ளிகள்)

ii. ஜேர்மனி, பெல்ஜியம், ஆஸ்திரியா, சிங்கப்பூர், குவாங்கோ நதி, வடகொரியா (06 புள்ளிகள்)

(ஆ)

i. கீழே A,B,C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. கைத்தொழில் வளர்ச்சி காரணமாக முதலாம் உலகமகா யுத்தத்தின் ஆரம்பத்திலே வல்லரசுத் தன்மையுடன் விளங்கிய நாடு?

B. ஏர்பூட்டப்பட்ட குதிரைகள் மூலம் வரிசையாக பயிரிடப்படும் முறைகளை அறிமுகம் செய்தவர் யார்?

C. பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர் யார்?

D. முதன் முதலாக இலங்கையில் தபால் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு எது? (04 புள்ளிகள்)

- A மற்றும் B இனால் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.



1) அருகில் காட்டப்படும் நிர்மாணிப்பு யாது?
2) இவ் நிர்மாணிப்பு அமைந்துள்ள நகரம் யாது?
3) இவ் நிர்மாணிப்பினை உருவாக்கிய மன்னன் யார்?
4) இவ் நிர்மாணிப்பு எச் சமயத்துடன் தொடர்புடையது?

(04 புள்ளிகள்)

iii.



1) அருகில் உள்ள ஓவியத்தில் காட்டப்படும் மன்னன் யார்?
2) இம் மன்னனின் ஆட்சி இடம்பெற்ற இராசதானி எது?
3) இவ் ஓவியம் யாரால் வரையப்பட்டதாகும்?
4) இம் மன்னனுடன் தொடர்புபட்டதாக கூறப்படும் பழமொழி யாது?

(04 புள்ளிகள்)

வினா இலக்கம் - 05

(அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

I. தீகவாபி, அருவியாறு, கக்கந்த நதி, மாங்குளம், பெற்றிக்கோட்டை, புந்தல, தமன்கடுவ, புத்தல, பொம்பரிப்பு, கதிர்காமம், தந்துரே, குருளுவாவி (12 புள்ளிகள்)

iii. வங்காளவிரிகுடா, ஆங்கிலக்கால்வாய், நாகசாகி, கஸ்பியன் கடல், கருங்கடல், தாய்வான் (06 புள்ளிகள்)

(ஆ)

i. கீழே A,B,C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டிதன் என்று அழைக்கப்பட்ட மன்னன்.
B. அரசன் மற்றும் பிரதான அதிகாரிகளை கொண்ட சபை.
C. அரசுக்கு சொந்தமான நிலங்களில் பயிரிடுவதற்காக அறவிடப்பட்ட வரி.
D. நாச்சதூவ குளத்துடன் தொடர்புடைய நதி. (04 புள்ளிகள்)

- A மற்றும் B இனால் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.



1) அருகில் காட்டப்படும் கலைப்படைப்பு யாது?
2) இக் கலைப்படைப்பினை உருவாக்கிய ஓவியர் யார்?
3) இதனை உருவாக்கிய ஓவியரின் தாய் நாடு யாது?
4) இவ் ஓவியம் காணப்படும் தேவாலயம் யாது?

(04 புள்ளிகள்)

iii.



1) அருகில் காட்டப்பட்டுள்ள கண்டுபிடிப்பு யாது?
2) இதனைக் கண்டுபிடித்தவரின் பெயர் யாது?
3) இக் கண்டுபிடிப்பாளரின் தாய்நாடு எது?
4) இது எத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது? (04 புள்ளிகள்)

(30 x 5 = 150 புள்ளிகள்)